# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

## MCOP.No. 17/2022

| | | |
|---|---|---|
| Name | : | திரு. முத்துக்கிருஷ்ணன் **Rw3** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 25th day of February 2026.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்பொழுது தென்காசி மாவட்டடம், குற்றாலம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன். அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை கொண்டு வந்திருக்கிறேன். குற்றாலம் காவல்நிலைய குற்ற எண். 178/2021, சட்டப்பிரிவு 279, 337, 304(A) IPC வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள் புகார், முதல் தகவல் அறிக்கை, பார்வை மகசர், மாதிரி வரைபடம், 2 வாகனங்களின் மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள், பிரேத பரிசோதனை அறிக்கை, காய சான்று மற்றும் குற்ற இறுதி அறிக்கை ஆகியவற்றின் உண்மை நகலை தாக்கல் செய்கிறேன். அது **எ.ம.சா.ஆ.3 வரிசை** ஆகும்.

**மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

விபத்து சம்பவம் நடந்த தேதியில் நான் மேற்படி காவல் நிலையத்தில் பணிபுரியவில்லை என்றால் சரிதான். மேற்படி விபத்து குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கில் எந்தெந்த சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர் என்பது குறித்த ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. உரிய சாட்சிகளை விசாரணை செய்யாமல் அவசர கதியில் வழக்கை முடிக்கவேண்டும் என்பதற்காக இவ்வழக்கின் விசாரணை அதிகாரி ஒருதலைப்பட்சமாக ஒரு இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் ஏற்கத்தக்கவை அல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi